**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 35/2022</u>**

பெயர் : மனோகரன் P.W.1. Cross

த/பெ. : காத்தான்

தேதி : 01.12.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். தாவா சொத்தின் சர்வே எண். 230/1 ஆகும். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 13 செண்ட் ஆகும். சர்வே எண்.230/3ல் 16 ஏர்ஸ் ஆகும். மேற்படி இரண்டு நிலங்களுகம் நஞ்சை நிலங்களாகும். இரண்டு சொத்துகளுக்கும் ஒரே நான்கெல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் தெற்கில் மகேந்திரனின் நஞ்சைநிலம், வடக்கில் எனது நஞ்சை நிலமும், கிழக்கில் வண்டி பாதை, மேற்கில் அரசு பாசன கண்னி உள்ளது. வழக்குரையில் தாவா சொத்திற்கான நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரயம் பெற்ற சொத்திற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் மாற்றபட்டுள்ளதால் அதை நீக்கம் செய்யக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா அடங்கலை தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 4 ஆன ஆவணமானது நான் தாக்கல் செய்துள்ள சிட்டா அடங்கல் என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதி NSL Nagapattinam Infra Structure Pvt. Ltd. தான் உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் சிட்டா அடங்கல் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பட்டா மாறிவிட்டதால் எனது பெயரில் வழங்க இயலாது என கூறிவிட்டார்கள்.

3. 1ம் பிரதிவாதிக்கு யார் தாவா சொத்தை பொறுத்து கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் எனது கிரய முன்னவரின் வாரிசு எழுதிக்கொடுத்துள்ளார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**